ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2291/45 - 2022 අගෝස්තු මස 05 වැනි සිකුරාදා - 2022.08.05

*2291/45 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாய்ந்தன்மை வாய்ந்த ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவுக்கு ஏற்ப ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்தை கண்காணிப்பதற்கான தத்துவங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதனுடன் தொடர்புடைய விளைவாய்ந்தன்மை வாய்ந்த விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை வழங்குவதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊவா மாகாண சபையின், 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டம் என அடையாளம் காணப்படும் நிர்வாகத்தை கண்காணிக்கும் தத்துவம் தொடர்பான 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச் சட்டத்தின் 2 (3)அ(1) ஆம் பிரிவின் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்கள் பிரகாரம், ஊவா மாகாணத்தின் ஆளுநரான ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான், கதிர்காமம் பிரதேச சபையின் செயற்பாடுகளை 2022.05.09 ஆந் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்தி விசாரணை ஒன்றை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 09.05.2022 ஆந் திகதிய 2279/ 10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் நீதிமன்ற அதிகாரி ஓய்வுபெற்ற நீதிபதி எச். எம்.ஆர். அநுர குமார அவர்களை நியமித்தேன்.*

*இந்த விசாரணை ஆணைக்குழுவை நடாத்திச் செல்லும் போது ஏற்றப்பட்ட நடைமுறை பிரச்சினைகளை கருத்திற் கொண்டு, விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கும் காலம் 2022, ஒகத்து மாதம் 09 ஆந் திகதியிலிருந்து 2022, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
*ஊவா மாகாண ஆளுநர்.*

*ஊவாக மாகாண ஆளுநர் அலுவலகம்,*
*2022, ஒகத்து 04.*